பக்கங்கள்:-30

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 25 | ஞாயிற்றுக்கிழமை | 09.03.2025 | அதிர்வு 217

## முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர தப்பியோட்டம்



2010 ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பிரசன்ன

07

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசு தனிவழி

### கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் திட்டவட்டம்

வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனி அணியாகவே போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டம் நேற்று மாலை மட்டக்களப்பில் கட்சியின் மாவட்ட தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சாணக்கியன் தலைமையில் நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்பாளர்கள் தெரிவு தொடர்பாக

07



# இவ்வருட இறுதியில் மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடி

## புதிய ஜனாதிபதி ஐ.தே.கவில் இருந்தே தெரிவு செய்யப்படுவார் என்கிறார் வஜிர



**“ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணையாவிட்டாலும் பத்தாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார். அது ஜனநாயக ரீதியாகவோ, அரசமைப்பு ரீதியாகவோ அல்லது பொருளாதார நெருக்கடியின் மூலமாகவோ இடம்பெறலாம். இந்த ஆண்டின் இறுதியில் மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ள நேரிடும்.”**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

06

# கைது வேட்டை மூலம் எம்மை முடக்க முடியாது!

### நாமல் எம்.பி. சூளுரை

கைது வேட்டை மூலம் எமது அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. சூளுரைத்தார்.

பெண் உரிமைகள் பற்றி பேசும் தற்போதைய அரசுதான், 97 வயது பாட்டியைக் கைது செய்து, உணவுகூட வழங்காமல் விசாரணை நடத்தியுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

06






இந்தியத் தூதரகத்தின் உயர்மட்டக் குழு ஒன்று நேற்று திருக்கோணேஸ்வரத்திற்குச் சென்றிருந்தது. அங்கு ஆலயத் திருப்பணி தொடர்பான விடயங்களைக் கேட்டறிவது அக்குழுவின் நோக்கம் என்று கூறப்பட்டது. கோணேஸ்வரர் ஆலயத் திருப்பணிக்கு இந்தியா உதவ வேண்டும் என்று பகிரங்கமான கோரிக்கையை முன்வைத்த இந்து மாமன்ற உப தலைவர் ஆறு திருமுருகனும் நேற்றைய சந்திப்பில் பங்குபற்றினார். ஏற்கனவே திருக்கேதீஸ்வரத் திருப்பணிக்கு முழு அளவில் உதவிய இந்தியா, திருக்கோணேஸ்வரத் திருப்பணிக்கும் உதவ வேண்டும் என்று ஆறு.திருமுருகன் உட்படப் பலரும் வற்புறுத்தி வருகையில், அந்த விடயத்தை ஆராய்வதற்காகவே இந்தியத் தூதரகக் குழு திருமலை சென்றதாகக் கூறப்பட்டது. ஒரு வகையில் அது உண்மை எனினும் அதையும் தாண்டிய விடயங்களும் உண்டு.

ஏற்கனவே ரணில் அரசின் காலத்தில் இருந்து கிழக்கின் அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவியை அதிகம் பெறுவது என்ற விடயம்

06

# பணியிடங்களில் பெண்கள் துன்புறுத்தப்படுகின்றனர்

## சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவிப்பு

வேலை செய்யும் இடங்களில் வன்முறை மற்றும் பல்வேறு வகையான துன்புறுத்தல்கள் காரணமாக ஒவ்வொரு நபரும் வருடத்திற்கு ஆறு வேலை நாட்களை இழக்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை கூறுவதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு வேலை நாள்கள் இழப்பதால் 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் ஒன்பது நிறுவனங்களை மையப்படுத்தி நடத்தப்பட்ட ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மீதான வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித பிரேமதாஸ இதனைத் தெரிவித்தார்.

வேலை செய்யும் இடத்தில் 75 வீத ஆண்கள், பெண்களிடம்




நியாயமற்ற முறையில் நடந்துகொள்வதாக அறிக்கைகள் குறிப்பிடுவதாக சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

பெண்களை வேலைக்கு அமர்த்துவதையும் அவர்களை முன்னேற்றுவதையும் தடுக்க இந்த ஆண்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

நாட்டில் பழமைவாத முதலாளிகள் வேலை செய்யும் இடத்தில் பெண்களை வேலைக்கு அமர்த்த தயங்குவதாகவும் அறிக்கை கூறுவதாக சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

# சுகாதாரத் துறையில் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை செயல்படுத்த தீர்மானம்

சுகாதாரத் துறையில் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை திறம்பட செயல்படுத்துவது தொடர்பில் அந்த அமைச்சின் தேசிய நடவடிக்கை குழு ஒன்றுகூடி கலந்துரையாடியுள்ளது.

அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க தலைமையிலான இந்தக் குழுவில், சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் 37 தலைவர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த கலந்துரையாடலின்போது, சுகாதாரத் துறையில் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்குத் தேவையான யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுகாதார சேவையின் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிக்குழாம் ஒன்று நியமிக்கப்பட




வேண்டும் எனவும் குறித்த வழிகாட்டுதல் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மகன் செலுத்திய கார் மோதி பேராசிரியரான தாய் மரணம்

கொழும்பு, கொஹுவளை பொலிஸ் பிரிவில் சுமன ராம வீதியில் கார் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கார் ஒன்று சாரதியால் செலுத்த முடியாமல் செயலிழந்துள்ள நிலையில், சாரதியின் தாயும் மனைவியும் இணைந்து கார் சக்கரத்தில் இருந்த கல்லை அகற்ற முயன்றுள்ளனர்.

இதன்போது கார் திடீரென இயங்கியுள்ள நிலையில் சாரதியின் தாய் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சாரதியின் தாய் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தாய் கொஹுவளை பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் ஆவார்.



நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான, மேலதிக விசாரணைகளை கொஹுவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இன்னும் 3 ஆயிரத்து 575 ஏக்கர் நிலம் யாழ் குடாநாட்டில் படையினரின் வசம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றும் 3 ஆயிரத்து 575 ஏக்கர் நிலம் படையினரின் பிடியில் இருப்பதாக மாவட்ட அரச அதிபர் நாடாளுமன்றச் செயலாளருக்கு எழுத்தில் அறிவித்துள்ளார்.

போர் முடிந்து 16 ஆண்டுகளாகின்ற நிலையில் மக்களின் நிலங்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுத் தொடர்ச்சியாக முன் வைக்கப்படுகின்றது. இதனையடுத்து வடக்கின் 5 மாவட்டத்திலும் படையினர் வசம் உள்ள நிலங்கள் தொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் மாவட்ட அரச அதிபர்களிடம் எழுத்தில் கோரியமைக்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் வழங்கிய பதில் கடிதத்திலேயே இந்த விவரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்தில் தற்போதும் தனியார் காணிகள் 2 ஆயிரத்து 624.282 ஏக்கர் படையினர் வசம் உள்ளதோடு அரச காணிகள் 951.524 ஏக்கர் உள்ளது. இதற்கமையவே தற்போதும் மொத்தமாக 3 ஆயிரத்து 575.806 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது.

# 16 ஆண்டுகளில் வவனியாவிற்குக் கிடைத்த நிதியில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் ரூபா மட்டுமே திரும்பியது!

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து எந்த நிதியும் திரும்பவில்லை

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்டத்திற்கு மத்திய அரசிடம் இருந்து கிடைத்த நிதியில் 2009 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான 16 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் ரூபா மட்டுமே பயன்படுத்தப்படாமல் திரும்பியுள்ளதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு வரும் நிதி மக்கள் பயன்பாட்டிற்கு செலவு செய்யப்படாமல் மத்திய அரசிற்கே திருப்பி அனுப்பப்படுவதாக கொழும்பில் அமைச்சர்கள் முதல் ஜனாதிபதி வரையில் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பில் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்பு வடக்கிற்கு ஒதுக்கிய நிதியில் திருப்பி விடப்பட்ட நிதியின் பெறுமதியை சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் மாவட்டச் செயலாளர்களிடம் எழுத்தில் கோரியிருந்தார்.

நாடாளுமன்றச் செயலாளரின் எழுத்து மூல கோரிக்கைக்கு பதிலளிக்கும்போதே வவுனியா மாவட்டச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதிலளிக்கப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2009 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான 16 ஆண்டுகளில் வவுனியாவில் இருந்து மொத்தமாக ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 332 ரூபா நிதி மட்டுமே திரும்பியது.



இதே 16 ஆண்டு காலப் பகுதியில் திட்டங்களிற்காக மத்திய அரசில் இருந்து ஆயிரத்து 872 மில்லியன் ரூபா மட்டுமே கிடைத்தது எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து எந்த நிதியும் திரும்பிச் செல்லவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் வடகிழக்கு மகளிருக்கு புதிய அரசின் பதில் என்ன?

## நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய ரவிகரன் எம்.பி.



(விஜயரத்தினம் சரவணன்)

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்திடம் உறவுகளைக் கையளித்த நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடி அலையும் மகளிர்களுக்கான புதிய அரசாங்கத்தின் பதிலென்ன என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளமையுடன், மகளிர் விவகார அமைச்சர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்து கலந்துரையாடி அவர்களுக்கு உரிய பதிலையும் வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினரா ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை வன்னிப்பகுதி மற்றும், வடக்கு, கிழக்கிலுள்ள பெண் த்லைமைத்துவக் குடும்பங்கள், பெற்றோரை இழந்த சிறார்கள், மாற்றுத்திறனாளிச் சிறார்கள், மாற்றுத்திறனாளிகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டுமெனவும் இதன்போது அவர் வலியுறுத்தினார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - இன்று மார்ச் - 08. பன்னாட்டு மகளிர் தினம். இந்த நிலையில் இறுதி யுத்தகாலத்தில் இராணுவத்திடம் பிள்ளைகளைக் கையளித்த தாய்மாரும், கணவர்களைக் கையளித்த மனைவியருமாக எமது வடக்கு,கிழக்கு பகுதிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி 2923 நாள்களாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் ஒவ்வொரு மகளிர் தினத்தையும் துக்க நாளாக அறிவித்து பாரிய கனைவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தைச் செய்தமை போல இந்த வருடமும் முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் முல்லைத்தீவு - வட்டுவாகல. பகுதியில் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றினை நடத்தி தமக்கான நீதியைக் கோரியிருக்கின்றனர்.

இந்த மகளிர்களுக்கான பதில்தான் என்ன? இந்த பன்னாட்டு மகளிர் நாளில் புதிய அரசாங்கம் அந்த மகளிர்க்கான நீதியை வழங்குமா? அதற்கான உத்தரவாதத்தை வழங்கவேண்டும்.

அன்றைய அரசின் வாக்குறுதிகளை நம்பி ஒப்படைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்காணவர்களுக்கு என்னநடந்தது? தொடர் ஓலங்கள், அழுகுரல்கள். பலர் மனஅழுத்தங்களுக்கு உள்ளாகி இறந்தும் விட்டார்கள்.

இந்த நிலையில் நீதி கிடைக்க வேண்டும் எனப் போராடும் இவர்களுக்கு அடிக்கடி பொலிஸார் நீதிமன்றத்தின் தடை உத்தரவு, பயங்கரவாத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைகள், வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக மிரட்டுவது, மறைமுகத் தாக்குதல்கள், உயிர்அச்சுறுத்தல், போராட்டங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சிகள், இப்படியான ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுகின்றன.

2009ற்கு பின்னர் பல பெயர்களில் கொண்டுவரப்பட்ட பொறிமுறைகளில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், இவற்றை நம்பி தாம் ஏமாந்ததுதான் மிச்சம் எனப் புலம்புகின்றார்கள். புதிய அரசு இந்த விடயத்தில் உண்மைத் தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும். கடந்தகால அரசுகள் இவர்களுக்குப் பதில் சொல்லவில்லை. புதிய அரசு பதில் சொல்லவேண்டும். இந்தக. குறைகளை நீண்ட நாள்களாகச் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த மகளிரைள நீங்கள் சந்திக்க வேண்டும். அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறவேண்டும். தீர்வுக்கான முயற்சிகளில் நீங்களும் இறங்கவேண்டும். அவர்களின் துன்பங்களில் நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள் அமைச்சர்அவர்களே.

அதே வேளை பெண்தலைமைத்துவக் குடும்பங்களாக மிகப் பெரிய தொகையினர் காணப்படுகின்றார்கள். வடக்கு, கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் சுமார் 92,000 குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. இவர்கள் சமுகத்தில் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். தமது வாழ்வாதாரத்துக்காக பெரிதும் சிரமப்படுகின்றார்கள். மிகவும் குறைந்தளவிலான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஓரளவிற்கு வருமானத்தை ஈடுசெய்தாலும், மிகுதி பெரும்பாலான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்காக பெரிதும் இடர்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு பிரதேச ரீதியான பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் புள்ளிவிவரங்களைப் பார்ப்பபோமானால், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 2617 குடும்பங்களும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 2121 குடும்பங்களும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 1941 குடும்பங்களும், மாந்தைகிழக்கு பிரதேசத்தில் 890 குடும்பங்களும், துணுக்காய் 813 குடும்பங்களும், மணலாறு 681குடும்பங்களுமாக மொத்தமாக 9063 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இதேபோன்று வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப் பகுதிகளிலும், வடக்கு, கிழக்கிலும் 92,000 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன.

தயவு செய்து பெண் தலமைத்துவக் குடும்பங்களுக்கு மாதாந்த வருவாய் ஈட்டக்கூடிய வகையில் உதவிகளைச் செய்யுங்கள். தங்களுடைய குடும்பங்களை சீராக கொண்டு செல்வதற்கு பல்வேறு சவால்கள. அவர்கள் எதிர்நோக்குகின்றார்கள். குடும்பச்சுமை, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலைமை, பாதுகாப்பின்மை, அன்றாட வாழ்வாதாரப் பாதிப்பு, உளரீதியான பாதிப்புகள், பிள்ளைகளின் கல்விப்பாதிப்பு, வேலைவாய்ப்பின்மை, பாலியல் ரீதியான பாதிப்புகள், சமுகத்தினால் ஓரங்கட்டப்படுதல், தாழ்வுமனப்பான்மை, நுண்நிதிக்கடன் நிறுவனங்களுக்கு அடிமையாகுதல் உள்ளிட்ட சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். குடும்பங்களை தலைமைதாங்கும் பெண்கள் சிலர் சவால்களை எதிர்கொள்ளமுடியாமல் தற்கொலை முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்.

எனவே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய வகையில் இவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

கூடுதலாக பெண்தலைமைத்துவக் குடும்பங்களிலுள்ள சிறார்கள்தான் பெரும்பாலும் பாடசாலை இடைவிலகல் நிலைமைக்கு உள்ளாகின்றனர். இக்குடும்பங்களின் பொருளாதாரத்தில் சிறுமாற்றங்களையாவது மகளிர் அமைச்சும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தியே பெற்றோர் இருவரையும் இழந்த சிறுவர்களாக 390பேர் காணப்படுகின்றார்கள். தாயை இழந்தவர்களாக 514சிறுவர்களும், தந்தையை இழந்த சிறுவர்களாக 2263பேரும் காணப்படுகின்றார்கள். அதேவேளை மாற்றுத்திறனாளிகளாகஉள்ள சிறுவர்களாக 292பேர் காணப்படுகின்றார்கள்.

அத்தோடு பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்தவர்களாக குடும்பத்தின் சுமைகளை இந்தச் சிறுவர்களே தாங்க வேண்டிய நிலமைகளும் காணப்படுகின்றன. இதனால் தற்போது சிறுவர்களின் பாடசாலை இடைவிலகல் கூடுதலாக காணப்படுகின்றது.

மகளிர் மற்றும் சிறுவர்விவகார அமைச்சர் அவர்களே,

தொடர்ச்சி▼

# காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் வடகிழக்கு மகளிருக்கு புதிய அரசின் பதில் என்ன?

## நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

கௌரவ பிரதமர் அவர்களே நீங்கள் பெண்மணிகள், அரசாங்கம் தகுதியான இடங்களுக்கு பொருத்தமானவர்களை நியமித்திருக்கின்றது. உங்களுக்கு நாம் வரிவாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றில்லை. முல்லைத்தீவு யுத்தத்தால் முழுமையாக பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகும். பொருளாதார ரீதியாக பலம் குறைந்த மாவட்டமுமாகும்.

முல்லைத்தீவில் மகளிர் தினத்திலேயே கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறுகின்றது. தங்களுக்கு இருக்கும் குறைகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கே போராடுகின்றார்கள். மகளிர் தினத்திலேயே போராடுகின்றார்கள்.

மகளிர் அமைச்சர் அவர்களே, முல்லைத்தீவிற்கு வாருங்கள். நீங்கள் சொல்லும் ஆறுதல் வார்த்தைகள் அவர்களின் வேதனைகளுக்கு சிறிய அளவிலான மருந்தாக அமையலாம்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்நிலுள்ள மாற்றுத் திறனாளிகள் தொடர்பிலான ஒரு தரவினை இங்கே குறிப்பிடலாமென நினைக்கின்றேன். எமது முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்டளவு மாற்றுத்தினாளிகள் உள்ளனர். புதுக்குடியிருப்பில் 943பேர், கரைதுறைபற்று 851பேர், ஒட்டுசுட்டான் 625பேர், துணுக்காய் 319பேர், மாந்தைகிழக்கு 275பேர், மணலாறு 145பேர் உள்ளடங்கலாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தம் 3,158பேர் மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். அவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் – என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றது.







தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசும் கிழக்கின் அபிவிருத்திக்கு தனது வரவு – செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கவில்லை. இந்தப் பின்புலத்தில் கிழக்கில் – குறிப்பாகத் திருகோணமலையில் – இந்திய உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது குறித்துப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில்தான் அடுத்த மாதம் அளவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வரவிருகின்றார். அவர் திருகோணமலைக்கும் – குறிப்பாக திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கும் – நிச்சயம் இம்முறை வருவார் என்று கூறப்படுகின்றது. அதையொட்டிய பூர்வாங்க ஏற்பாடுகளை கவனிப்பதும், நிலைமைகளை நேரில் ஆராய்வதும் கூட, தற்போதைய இந்திய தூதுக்குழுவின் திருமலை விஜயத்தின் நோக்கம் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

நாயன்மார்களினால் பாடல் பெற்ற இலங்கைத் தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரத்தில் பிரதமர் மோடி பூஜை வழிபாடுகளிலும், ஏகாந்தத் தியானத்திலும் பங்கு பற்றுதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் தெரிகிறது. அடுத்து வரும் வாரங்களில் நிலைமை உறுதியாகத் தெரிய வரும் என எதிர்பார்க்கலாம்.

\+ \+ \+

'வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழியை உடைப்பது போல' ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் உள்ளூராட்சி தேர்தல் நெருங்கும் சமயத்தில் நெருக்கடி ஒன்று உருவாகி இருப்பதாகத் தெரிகிறது.

கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பங்கு பற்றிய இணையவழிக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. அங்கு ஒரு விவகாரத்தை ஒட்டி நெருப்பெடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் சங்குச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டி நாடாளுமன்றத்துக்குச் சென்ற செல்வம் அடைக்கலநாதன், அங்கு கூட்டணியின் பிற தலைவர்களின் கலந்தாலோசனை இல்லாமல் தம் பாட்டில் அரசின் வரவு – செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்து வாக்களித்தமை தவறு என்று சுட்டிக்காட்டிய சிறிகாந்தா, அடுத்து வரும் நாள்களில் அந்தத் தவறை திருத்தும் விதத்திலான அறிவிப்பை வெளிப்படையாக செல்வம் அடைக்கலநாதன் வெளியிடாவிட்டால் அக்கூட்டணியில் இணைந்து தாங்கள் தொடர்ந்து பயணிப்பது சாத்தியமற்றது என நேற்றைய கூட்டத்தில் வெளிப்படையாகக் கூறிவிட்டார் எனத் தெரிகின்றது.

இவ்விவகாரத்தை ஒட்டி நீண்ட நேரம் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன எனவும் தெரிகிறது. ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமியும், ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் விடயத்தை கேள்விப்பட்டு இணைய சந்திப்புக்குள் விரைந்து இணைந்து, சில விளக்கங்களை அளித்த போதிலும் இன்னமும் சுமுகமான நிலைமை எட்டப்படவில்லை எனத் தெரிகிறது. நிலைமையை சமரசம் செய்ய புளொட் தலைவர் சித்தார்த்தனும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் எடுத்த முயற்சிகளும் இன்னும் பலன் தரவில்லை என்றும் கூறப்பட்டது.

வரவு – செலவுத் திட்ட வாக்களிப்புத் தொடர்பாக வெளிப்படையான அறிவிப்பு ஒன்றை அடுத்து வரும் தினங்களில் செல்வம் அடைக்கலநாதன் வெளியிடாவிட்டால், இந்த உள்ளூராட்சித் தேர்தலில் சிறிகாந்தா தரப்பு சங்குக் கூட்டணியில் இருந்து சற்றுத் தள்ளி நின்று – வெளியில் நின்று – பார்க்கும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ரெலோவில் இருந்து சந்தர்ப்பம் பார்த்து வெட்டப்பட்ட சிறிகாந்தா – சிவாஜிலிங்கம் இணை, அதே அனுபவத்தை ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியிலும் சந்தித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

---

## இவ்வருட இறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐ.தே.க.வின் மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பெண்கள் தொடர்பான பிரகடனம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது மாத்திரமின்றி நாட்டுக்குத் தேவையான பல்வேறு சட்டங்கள் அவரால் முன்வைக்கப்பட்டன. பொருளாதார அபிவிருத்திச் சட்டம், ஊழல் எதிர்ப்புச் சட்டம், கடனை எவ்வாறு மீள செலுத்துவது என்பதற்கான தேசிய கொள்கை சட்டம் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, சர்வதேச நிதி நிறுவனங்கள் அனைத்தும் பெண்களின் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்களில் பணம் பாதுகாக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர். அதற்கமைய அந்த சட்டங்களில் பெண்களுக்கு பெருமளவில் முன்னுரிமையளிக்கப்பட்டிருந்தது. இவற்றில் மத்திய வங்கி சட்டமும் உள்ளடங்குகின்றது. இவற்றுக்குப் புறம்பாக செயற்பட முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரேயொரு ஆசனத்தைப் பெற்ற போது அதன் அரசியல் பயணம் முடிந்துவிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அந்த ஒரு ஆசனமே வங்குரோத்தடைந்திருந்த நாட்டை அதிலிருந்து மீட்டது என்பதை நினைவுபடுத்துகின்றேன். ஆனால், தற்போது அந்த ஓர் ஆசனமும் இல்லையே இப்போது என்ன செய்வீர்கள் என்று என்னிடம் ஒருவர் கேட்டார். ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதியானதைப் போன்று, ஆசனம் இன்றியும் ஜனாதிபதியாக முடியும் என்று நான் பதிலளித்தேன்.

தேசிய கொள்கை பொறிமுறையுடன் பயணிக்கக் கூடிய பாதை ஐ.தே.கவுக்குக் காணப்படுகின்றது. எனவே, ஓர் ஆசனம் கூட இல்லையே என்று பயப்படத் தேவையில்லை. சிறப்பாகச் செயற்பட்டால் 10ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்க முடியும். ஓர் ஆசனத்தைக் கொண்ட நாமும், 3 ஆசனங்களைக் கொண்டிருந்த ஜே.வி.பி.யும் ஜனாதிபதிகளைப் பெற்றோம்.

ஆனால், எம்மில் இருந்து பிரிந்து சென்று அதிக ஆசனங்களைக் கொண்டிருந்தவர்களால் இரண்டு சந்தர்ப்பங்களிலும் அது முடியாமல் போனது. அவர்களுடன் ஒன்றிணையாவிட்டாலும் 10ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் ஐ.தே.க.வே உருவாக்கும். அது ஜனநாயக ரீதியிலோ, அரசமைப்பு ரீதியிலோ அல்லது பொருளாதார நெருக்கடியிலோ இடம்பெறலாம். நான் அறிந்த வகையில் இந்த வருடத்தின் இறுதியில் நாட்டில் மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்படும்.

ஜே.வி.பி. கூறும் 77 ஆண்டு சாபத்தில் தேங்காய் 80 ரூபாவாகும். உப்பு பைக்கட் 100 ரூபா மாத்திரமே. ஆனால், இன்று தேங்காய் 230 ரூபா, உப்பு 280 ரூபா. 1977இல் ஜே.ஆர்.ஜயவர்தன அனைவருக்கும் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ யுகத்தைத் தோற்றுவித்தார். ஆனால், இன்று ஓட்டோவின் விலை 20 இலட்சம் ரூபாவாகும். பாரதூரமான அவல நிலையை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்." – என்றார்.

---

## கைது வேட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:

"கொள்கைக்காகவே நாம் அரசியல் நடத்துகின்றோம். மாறாக அதிகாரத்துக்காக அரச பலத்தைப் பயன்படுத்துவதில்லை. பலவந்தமாக ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முற்படுவதும் இல்லை.

வெளிநாட்டு சக்திகள் பணம் செலவளித்து கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலக வைப்பதற்கு முற்பட்டபோதுகூட, அது ஜனநாயக விரோத கோரிக்கை எனத் தெரிந்தும் மக்களுக்காகக் கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறந்தார்.

அன்று முதல் இன்றுவரை நாம் மக்களுக்காக அரசியல் நடத்துபவர்கள். பொய் கூறி ஆட்சிக்கு வரப்போவதில்லை. நாட்டுக்குத் துரோகம் இழைத்ததும் கிடையாது.

எனது பாட்டியைக்கூட விட்டுவைக்கவில்லை. அவரையும் கைது செய்கின்றனர். இது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகும். எனினும், நாட்டிலுள்ள நீதித்துறை மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. அதன்மூலம் நிவாரணம் கிட்டும்."

– என்றார்.

# இரத்தக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு!

காலி மாவட்டம், பிட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடாமுன பகுதியில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக இரத்தக்காயங்களுடன் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொடாமுன பகுதியில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக இரத்தக்காயங்களுடன் நபர் ஒருவர் வீழ்ந்து கிடக்கின்றார் என்று பிட்டிகல பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேற்படி நபரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது அவர் இடைவழியிலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பிட்டிகல, கொடாமுன பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.

மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கரவெட்டியில் பாடசாலை மாணவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு

யாழ். வடமராட்சி கரவெட்டி பகுதியில் மாணவன் ஒருவர் வீட்டில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கரவெட்டி, மத்தணி பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான, மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்பி வெட்டிப் படுகொலை! அண்ணன் தப்பியோட்டம்!!

இரத்தினபுரி மாவட்டம், எலபாத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலுபத்கல பிரதேசத்தில் அண்ணனால் தம்பி வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

எலபாத்த பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய தம்பியே கொலை செய்யப்பட்டுள்ளார்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதால் இந்தக் கோளை சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான அண்ணன் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நீண்ட காலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தையடுத்து சந்தேகநபரான அண்ணன் பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எலபாத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டம் இன்று (நேற்று) நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதானமாக ஒவ்வொரு பிரதேசமாக அலசி ஆராய்ந்து என்ன முறையிலான அணுகுமுறையில் நாங்கள் இந்தத் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்று பலருடைய கருத்துக்களும் கேட்கப்பட்டு சுமுகமான முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை நாங்கள் போட்டியிடுகின்ற சகல உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிவாகை சூடலாம் என்று நம்பிக்கையோடு எங்களுடைய உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

வருகின்ற வாரத்துக்குள் நாங்கள் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்து விடுவதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிட வேண்டாம் என்று கூட்டத்தின்போது அனைவராலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அந்த முயற்சி முடிவடைந்துவிட்டது என்பதுதான் என்னுடைய கருத்து.

எங்களுடைய கட்சியின் பதில் தலைவர் அதற்கான ஒரு முயற்சியை முன்னெடுத்திருந்தார். ஆனால், எங்களுடன் பங்காளிகளாக இருந்த கட்சிகள் தாங்கள் வேறு ஒரு கூட்டணியாக இணைந்து இருக்கின்றோம் என்று எங்களுக்கு அறிவித்திருக்கின்றார்கள். ஆகையினால் ஓர் அணியாக ஒன்றுசேர்ந்து போட்டியிடுவது என்பது இப்போது முடியாத விடயம். தமிழரசுக் கட்சி தனி அணியாகப் போட்டியிடும்.

தேர்தலுக்குப் பின்னர் நிர்வாகங்களை அமைக்கின்ற விடயத்தில் ஒவ்வொரு கட்சிகளுடன் இணைந்துதான் நிர்வாகத்தை அமைக்க வேண்டியதாக இருக்கும். அதுதான் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முறைமை. ஆகையினால் அது குறித்து தொடர்ச்சியாகப் பல கட்சிகளோடும் பேசிக்கொண்டு இருக்கின்றோம்." – என்றார்.

## முன்னாள் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணவீரவைக் கைது செய்வதற்காகக் களனி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சிலர் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்வதற்காக அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அந்த வீட்டினுள் பிரசன்ன ரணவீரவின் மனைவியும் ஏனைய குடும்பத்தினரும் மாத்திரமே இருந்துள்ளனர்.

பின்னர் பிரசன்ன ரணவீரவின் மனைவி மற்றும் சாரதியிடம் இருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தப்பிச் சென்ற முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர தனது கையடக்கத் தொலைபேசியையும் துண்டித்துக் கொண்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணியை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட மூவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர உட்பட 6 பேரைக் கைது செய்ய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொலிஸ்மா அதிபரை தேடும் பொலிஸ்

இலங்கைப் பொலிஸாருக்கு இப்படி ஓர் இக்கட்டு நிலை வரக்கூடாது. தங்களுடைய பொலிஸ் துறையின் தலைவரையே - பொலிஸ்மா அதிபரையே - அவர்கள் இப்போது நாட்டுக்குள் தலைமறைவான கள்வனைத் தேடுவது போல தேடிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு வாரங்களாகத் தேடுகிறார்கள். ஆனால் அவர்தான் சிக்குபவராக இல்லை.

குற்றம் இழைத்தவர்களை - கொலைகாரர்களை - கொள்ளைக்காரர்களை - திருடர்களை - சந்தேக நபர்களை - தேடுகின்ற பொலிஸார் இப்போது அவர்களோடு சேர்ந்து தங்கள் பொலிஸ்துறையின் தலைவரையும் தேடும் அவல நிலைமை.

பொலிஸ்மா அதிபரான தேசபந்து தென்னக்கோன் உயர் நீதிமன்ற உத்தரவு ஒன்றின் பேரில் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார். எனினும் அவர்தான் பொலிஸ்மா அதிபர். அவர் நீதிமன்ற வழக்கின் மூலம் உத்தியோகபூர்வமாகப் பதவியை இழக்கும் வரை - அல்லது பதவியிலிருந்து ஓய்வு பெறும் வயதை அவர் அடையும் வரை - அந்தப் பதவி நிரப்பப்பட மாட்டாது. அதனால் இப்போது அவரது இடத்திற்குப் பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் பொலிஸ்மா அதிபரின் பதவியை ஆற்றி வருகின்றார்.

பொலிஸ்மா அதிபர் பதவியை தாம் ஈட்டுவதற்காக அரசியல் தலைமைகளுக்கு வளைந்து, நெளிந்து கொடுத்ததன் விளைவை தேசபந்து தென்னக்கோன் இப்போது அனுபவிக்கின்றார் என்று கூறலாம்.

அந்தப் பதவியைப் பெற்றதும், நாட்டில் பாதாள உலகம் குழுவினர் மற்றும் போதை வஸ்து கடத்தல்காரர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவரையும் கதிகலங்க வைத்தவர் தேசபந்து தென்னக்கோன்.

இத்தரப்பினருக்கு எதிராக ‘யுக்திய’ என்ற பெயரில் ஒரு முழு அளவிலான யுத்தத்தையே பிரகடனப்படுத்தி அதிரடி நடவடிக்கைகளை எடுத்தவர் அவர். அவரது பாய்ச்சலுக்கு ஈடு கொடுக்க முடியாமல், பாதாள உலகக் குழுவினரும் போதை வஸ்து கடத்தல் கும்பல்களும் ஓடி ஒளித்து கதிகலங்கியமை பேசப்பட்ட விடயம்.

இப்போது அவரே அதேபோல ஓடி ஒளித்துக் கதி கலங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

விதி வலியது என்பது இதனைத் தானோ...?

இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியில், பல்வேறு குசும்புத்தனங்களைப் பண்ணி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு வந்தவர் தேசபந்து தென்னக்கோன். இப்போது ஏன் அந்தப் பதவிக்கு வந்தோம் என்று அவருக்கு ஞானம் பிறந்திருக்கும் என நம்பலாம்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் அரசமைப்பு கவுன்ஸில் முடிவை - தீர்மானத்தை - அதன் தலைவராகச் செயல்பட்ட முன்னாள் சபாநாயகர் அரசியல் நோக்கங்களுக்காக - இலக்குகளுக்காக - வேண்டுமென்றே தவறாக அர்த்தப்படுத்தி, குயுக்தித்தனம் பண்ணியமையால் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகும் வாய்ப்புக் கிட்டியது.

ஆனால் அப்படி அந்தப் பதவியை அவர் பெற்றுக் கொண்டமை தவறு எனத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவர் பதவியிலிருந்து உயர் நீதிமன்றத்தினால் இடைநிறுத்தப்பட்டார். அந்தப் பின்புலத்தில் அவரது கெடுகாலம் தொடங்கியது.

அரசியல் சூதாட்டம் மூலம் பதவியை அவர் எட்டுவதற்கு உதவிய அரசியல்வாதிகள் எவரும் இப்போது சட்டத்தின் முன் - நீதிமன்றத்தின் முன் - அவரைப் பாதுகாக்கவோ காப்பாற்றவோ வரப் போவதில்லை.

சில சமயங்களில் குறுக்கு வழியில் அவருக்கு அந்தப் பதவியை பெற்றுக் கொடுத்த அரசியல்வாதிகள் அந்தத் தவறுக்காக தண்டனை அனுபவிக்க அல்லது பிராயச்சித்தம் தேடக் கட்டாயப்படுத்தப்படலாம்.

ஆயினும் தேசபந்து தென்னக்கோன் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வழி கிடைக்குமா என்பது தெரியவில்லை.

எது, எப்படி ஆயினும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் உயரிய வாய்ப்பும் பதவியும் தமக்கு கிட்டிய போது அவற்றை அரசியல் பக்கம் சாராது நேர்மையாக அவர் ஆற்றியிருந்தால் அவருக்கு இந்த நிலைமை வந்திருக்காது என்பது மட்டும் நிஜம்.







# 10 தேர்தல்களில் தோல்வி அடைந்ததால் அ.தி.மு.க. பலவீனம் அடைந்துவிட்டது

## டி.டி.வி. தினகரன் தெரிவிப்பு

"கடந்த 10 தேர்தல்களில் தோல்வி அடைந்ததால் அ.தி.மு.க. பலவீனம் அடைந்துவிட்டது. தற்போது அ.தி.மு.க. தலைமையில் இருப்பவர்கள் தங்களை ஜெயலலிதா என்று நினைத்து கொண்டுள்ளனர். அது வெறும் மாய பிம்பம். எனவே அ.தி.மு.க. தொண்டர்கள் ஏமாற வேண்டாம்,"

– இவ்வாறு அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

தமிழகத்தை குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பற்ற மாநிலமாக தி.மு.க. அரசு மாற்றிவிட்டதாக கூறி, தமிழக அரசைக் கண்டித்து அ.ம.மு.க. சார்பில் திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அ.ம.மு.க. பொதுசெயலர் டிடிவி தினகரன் தலைமை வகித்தார். இந்த போராட்டத்தில் பங்கேற்ற டிடிவி தினகரன் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"கடந்த 10 தேர்தல்களில் தோல்வி அடைந்ததால் அ.தி.மு.க. பலவீனம் அடைந்துவிட்டது.

திருநெல்வேலியில் அ.தி.மு.க. 3 ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. எதிர்வரும் 2026 சட்டப் பேரவை தேர்தலில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் கூட்டணி அமைத்து அ.ம.மு.க. போட்டியிடும்.

எதிர்வரும் சட்டப் பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஒரு வலுவான கூட்டணியாக அமையும். தற்போது அ.தி.மு.க. தலைமையில் இருப்பவர்கள் தங்களை ஜெயலலிதா என்று நினைத்து கொண்டுள்ளனர். அது வெறும் மாய பிம்பம். எனவே அ.தி.மு.க. தொண்டர்கள் ஏமாற வேண்டாம்." – என்றார்.

# எந்த கட்சியுடனும் கூட்டணி வைக்க அ.தி.மு.க. தவம் கிடந்ததில்லை

## எடப்பாடி கே பழனிசாமி தெரிவிப்பு



எந்த கட்சியுடனும் கூட்டணி வைக்க அ.தி.மு.க. தவம் கிடந்ததில்லை என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் மத்தியில் தேர்தல் ஜுரம் பரவி வருகிறது. தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில், மறைமுகமாக இப்போதே தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டனர்.

தி.மு.க, அ.தி.மு.க. போன்ற பிரதான கட்சிகளில் இப்போதே உத்தேச வேட்பாளர் பட்டியலையும் தயாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. கட்சி சார்பில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் அரசியல் தலைவர்கள் மைக்கை பிடித்தாலே தேர்தல், கூட்டணி தொடர்பாகவே பேசி வருகின்றனர். இதனால் தமிழகத்தில் அரசியல் களம் சூடு பிடித்துள்ளது.

இந்நிலையில், பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, நேற்று கோவையில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "பா.ஜ.க. தீண்டத்தகாத கட்சி, நோட்டா கட்சி, கூட்டணியில் பா.ஜ.க. இருந்ததால்தான் தோற்றோம், பா.ஜ.கவுடன் கூட்டணி வைக்க மாட்டோம் என்றெல்லாம் கூறியவர்கள் இன்று பா.ஜ.கவுடன் கூட்டணி வைக்க தவம் கிடக்கிறார்கள். அவ்வாறு தவம் இருக்க வேண்டிய சூழ்நிலையை பாஜக தொண்டர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் மகளிரணி சார்பில் நேற்று நடைபெற்ற மகளிர் தின விழாவில் பங்கேற்ற கட்சியின் பொதுச்செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.கவை பொறுத்தவரை கட்சி தொடங்கியதில் இருந்து இன்று வரை, எந்த கட்சியுடனும் கூட்டணி வைக்க தவம் கிடந்த சரித்திரம் கிடையாது. அ.தி.மு.கவை பொறுத்தவரை பலம் பொருந்திய கட்சி. அ.தி.மு.கவை தோற்றுவித்ததில் இருந்து இன்று வரை கூட்டணி வைக்க தவம் கிடந்தது கிடையாது." என்றார்.









# டொராண்டோவில் இரவு விடுதிக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்12 பேர் காயம்

கனடாவில் உள்ள களியாட்ட விடுதி ஒன்றில் அடையாளந்தெரியாத நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

டொராண்டோவில் ஸ்கார்போரோ பகுதியில் உள்ள களியாட்ட விடுதியிலேயே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் தப்பிச்சென்றுள்ள நிலையில் துப்பாக்கிதாரியை கைது செய்யும் நடவடிக்கையில் அந்த நாட்டு பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

காயமடைந்தவர்கள் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உக்ரைனுடன் செயற்கைக்கோள் படங்களை பகிர்வதைத் தற்காலிகமாக நிறுத்திய அமெரிக்கா






அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உத்தரவுகளின்படி, உக்ரைனுடன் செயற்கைக்கோள் படங்களைப் பகிர்வதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

ரஷ்ய துருப்புக்களின் நடமாட்டங்களைக் கண்காணிக்க அமெரிக்காவின் செயற்கைக்கோள் படங்களை உக்ரைன் பயன்படுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகிய நிலையில், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நாட்டின் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கியுடன் நடந்த சர்ச்சைக்குரிய வெள்ளை மாளிகை சந்திப்பிற்குப் பின்னர், ட்ரம்ப் நிர்வாகம் இராணுவ உதவியை நிறுத்தியது.






உக்ரைனுடன் உளவுத்துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளது.






# சிரியாவில் தொடரும் பதற்றநிலை; பலி எண்ணிக்கை 524 ஆக அதிகரிப்பு




சிரியாவின் பாதுகாப்புப் படையினருக்கும் பஷார் அல் – அசாத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையில் கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவத்தில் 340 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட பஷார் அல்–அசாத்தின் ஆட்சியுடன் தொடர்புடைய போராளிகளை ஒடுக்குவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை பாரியை வன்முறை யாக மாறியுள்ளது.

இரண்டாவது நாளாகவும் தொடரும் இத்தாக்குதலில் 524 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவற்றில் 213 பேர் பாதுகாப்புப் படையினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.














# “பிள்ளைகளைத் தினம் தினம் தேடிக்கொண்டே நீதி கிட்டாமல் இறந்து கொண்டிருக்கின்றோம்”

## முல்லையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் 8 வருடங்கள் பூர்த்தி

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டமானது இன்று வரை தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 வருடங்களுக்கு மேலாக நீதி கோரி போராட்டம் மேற்கொண்டு வரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்றைய தினமும் முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாமிற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு, வட்டுவாகல் பாலம் ஊடாக பேரணியாகச் சென்று வட்டுவாகல் பகுதியில்

தொடர்ச்சி▼















# “பிள்ளைகளைத் தினம் தினம் தேடிக்கொண்டே நீதி கிட்டாமல் இறந்து கொண்டிருக்கின்றோம்”

## முல்லையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் 8 வருடங்கள் பூர்த்தி

தொடர்ச்சி▲

இறுதியாக உறவுகளைப் படையினரிடம் கையளித்த இடத்திற்கு முன்பாக வரைச் சென்று நிறைவடைந்தது.

போராட்டத்தின் போது “சர்வதேசமே பதில் சொல்!”, “சர்வதேசமே எமக்கான தீர்வு என்ன?”, “பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே நீதியின்றி இறந்து கொண்டிருக் கின்றோம்“, “கொக்குதொடுவாய் மனித புதைகுழி விட யத்தை மூடி மறைக்க வேண்டாம்!”, “எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும்!“, “தமிழரைக் கடத்தாதே! இனவழிப்பு செய்யாதே!“, “ உங்கள் சிறைக்கூடம் எங்கள் பிள்ளைக ளுக்கு என்ன கல்விக்கூடமா?”, “எமது நாட்டில் நாம் வாழ உரிமையில்லையா?“, “ உலகமெல்லாம் பெண்கள் உரிமை பேசும் இந்நாளிலும் தெருவில் கிடந்து அழவைத்திருக் கிறது அரசு“ என்பன போன்ற பல்வேறு கோசங்களையும் எழுப்பி, பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் போது வட்டுவாகல் விகாரைக்கு செல்லும் வழியில் அதிக எண்ணிக்கையான பொலி ஸார் கடமையில் ஈடுபட்டடிருந்தமையும் குறிப்பிடத்தக் கது.






















# வெளிநாடுகளுக்கான துரித பொதி சேவைகள் தபால் திணைக்களத்தால் ஆரம்பித்து வைப்பு!

(கி.வசந்தன்)

இலங்கை தபால் திணைக்களத்தால் வெளிநாடுகளுக்கான துரித பார்சல் சேவை நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னட்டு நாடு தழுவிய விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், வவுனியா மாவட்டத்திற்கான நிகழ்வு வவுனியா பிரதான தபால் நிலையத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சேவை மூலம் பொருள்கள், ஆவணங்கள், தபால் போன்றவற்றை அரச பாதுகாப்புடனும், விரைவாகவும், குறைந்த கட்டணத்திலும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம் என விழிப்புணர்வுத் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது.

இச் செய்யட்பாட்டினை மக்களுக்கு தெளிவு படுத்தும் முகமாக வவுனியா தபால் ஊழியர்களினால் வவுனியா நகரப் பகுதியில் விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றதோடு துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் உட்பட தபால் ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.










# மட்டக்களப்பில் மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை!





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் மீண்டும் பொலிஸார் குடியிருப்பாளர்களின் விவரம் திட்டுவதற்கான விண்ணப்பபடிவங்களை வீடுவீடாக சென்று வழங்கும் நடவடிக்கையை நேற்று சனிக்கிழமை ஆரம்பித்துள்ளமையை அடுத்து, அது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

1865 ம் ஆண்டு 16 ம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76 ஆம் பிரிவிற்கமைய வீடுகளில் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கி இருப்போரின் விவரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தலைப்பிலான இந்த விண்ணப்பப் படிவங்களை மட்டக்களப்பு நகரிலுள்ள பகுதிகளில் வீடுவீடாக பொலிஸெ சென்று வழங்கிவருகின்றனர்.

இந்த பொலிஸ் பதிவு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்த யானைகளை யாருமே கட்டுப்படுத்த மாட்டார்களா? எவருமே கவனிப்பதாயில்லை! ஏழை விவசாயிகள் விசனம்







(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை கரையோரப் பகுதிகளில் அறுவடை நடைபெறும் சமகாலத்தில் யானைகளின் வருகை பலத்த சேதத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தி வருகிறது.

காரைதீவு நிந்தவூர் எல்லையில் அறுவடைக்கு தயாராக இருந்த இருவேறு விளைந்த வயல்கள் யானைகளின் அட்டகாசத்தால் துவம்சம் செய்யப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவில் இடம் பெற்றுள்ளது.

நடுநிசியில் புகுந்த யானைகள் அங்கு சில நிமிடங்கள் அட்டகாசம் செய்தது. பின்னர் செல்லும் போது சுமார் 4 ஏக்கர் வயல் காணிகளை துவம்சம் செய்து வெளியேறின.

இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயி எம்.ரவீந்திரன் ஊடகங்களுக்கு கூறுகையில்–

நேற்று நடுநிசியில் யானைகள் எமது அறுவடைக்கு தயாராக இருந்த இருவேறு விளைந்த வயல்களுக்குள் புகுந்து இந்த அட்டூழியத்தைச் செய்துள்ளன.

நான் அதிகாலையில் இங்கு வந்துபார்த்தேன். இவை சேதமடைந்துள்ளன. எனது வயலும் அருகில் உள்ள குமாரின் வயலும் சேதமடைந்தன. உரியவர்களிடம் முறைப்பாடு செய்துள்ளேன்.

இந்த யானைகளை கட்டுப்படுத்த மாட்டார்களா? தினம் தினம் யானைகள் இவ்வாறு அட்டகாசம் செய்து வருகின்றன. யாருமே கவனிப்பதாயில்லை. ஏன் இது?

அரசாங்கம் பாதுகாப்பை ஏற்படுத்துவதுடன் நட்டஈட்டையும் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

யானைகளால் வேளாண்மை அறுவடை முடிந்த பின்னரும் அடிக்கடி இவ்வாறு சேதமேற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# உள்நாட்டு துப்பாக்கிகள் மற்றும் கஞ்சாவுடன் வவுனியா பாவற்குளம் பகுதியில் 5 பேர் கைது

(கி.வசந்தன்)

உள்நாட்டு துப்பாக்கிகள் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனியின் அறிவுறுத்தலின் கீழ் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயதிலகவின் தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் ராஜகுரு, பொலிஸ் சார்ஜண்டுகளான திஸநாயக்க, அசங்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான சிந்தக்க, விதுசன், பொலிஸ் சாரதி திஸநாயக்க உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் வவுனியா, பாவற்குளம் படிவம் 2 பகுதியில் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், இரண்டு இடத்தில் இருந்து மீட்கப்பட்டன. மேலும் 2 கிராம் கஞ்சா மற்றும் இரண்டு மான் கொம்புகளும் மீட்கப்பட்டன. அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சட்டில் அப் பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், நீதிமன்றினால் இரண்டு பிடிவிறாந்து விதிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டார்.

மூவரும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டு உளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும், வவுனியா, கோவில்குளம் பகுதியில் மாடு திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றின் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட பாவற்குளம் படிவம் 2 பகுதியைச் சேர்ந்த மேலும் இருவரும் இதன்போது மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.



கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளின் பின் உளுக்குளம் மற்றும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

# வடக்கில் பிறப்பு விதம் குறைவடைகின்றது தரம் 1 இல் மாணவர் எண்ணிக்கையும் வீழ்ச்சி



வலய ரீதியாக 2015 முதல் 2025 வரையில் தரம் 01 மாணவர்களின் எண்ணிக்கை

| No. | Zone | 2025 | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | JAFFNA | 2762 | 2443 | 2444 | 2513 | 2791 | 3264 | 3137 | 3088 | 3166 | 3114 | 2911 |
| 2 | VALIKAMAM | 2661 | 2595 | 2434 | 2430 | 2461 | 2450 | 2486 | 2634 | 2558 | 2533 | 2399 |
| 3 | VADAMARACHCHI | 1248 | 1194 | 1174 | 1250 | 1383 | 1560 | 1352 | 1487 | 1510 | 1396 | 1457 |
| 4 | THENMARACHCHI | 887 | 862 | 828 | 771 | 799 | 907 | 941 | 874 | 920 | 825 | 814 |
| 5 | ISLANDS | 520 | 527 | 496 | 563 | 553 | 430 | 524 | 539 | 563 | 571 | 473 |
| 6 | KILINOCHCHI NORTH | 518 | 524 | 458 | 423 | 458 | 489 | 512 | 487 | 590 | 577 | 547 |
| 7 | KILINOCHCHI SOUTH | 1410 | 1388 | 1350 | 1339 | 1476 | 1742 | 1749 | 1679 | 1750 | 2038 | 1732 |
| 8 | MANNAR | 1601 | 1692 | 1564 | 1533 | 1582 | 1580 | 1637 | 1736 | 1677 | 1499 | 1461 |
| 9 | MADHU | 462 | 408 | 431 | 439 | 485 | 467 | 500 | 470 | 466 | 431 | 445 |
| 10 | VAVUNIYA NORTH | 611 | 560 | 542 | 526 | 599 | 728 | 724 | 609 | 604 | 671 | 536 |
| 11 | VAVUNIYA SOUTH | 2091 | 2133 | 2067 | 2088 | 2211 | 2417 | 2391 | 2320 | 2304 | 2187 | 2098 |
| 12 | MULLAITIVU | 1313 | 1309 | 1163 | 1213 | 1409 | 1496 | 1485 | 1540 | 1477 | 1549 | 1435 |
| 13 | THUNUKKAI | 519 | 495 | 490 | 474 | 563 | 550 | 567 | 578 | 562 | 666 | 587 |
| Provincial Total | | 16603 | 16130 | 15441 | 15562 | 16770 | 18080 | 18005 | 18041 | 18147 | 18057 | 16895 |

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் பிறப்பு விதம் குறைவடைந்து செல்வதை தரம் 01இல் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கடந்த 10 ஆண்டுகளாக தரம் 1 இல் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை கோரிப் பெறப்பட்டது. அந்த எண்ணிக்கையிலேயே இது உறுதி செய்யப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் ஆண்டு ரீதியாக தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளிலும் 18 ஆயிரத்தை தாண்டிய எண்ணிக்கையான மாணவர்கள் தரம் இல் இணைந்துள்ளனர்.

2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளிலும் 16 ஆயிரத்தை அண்மித்த மாணவர்களே தரம் ஒன்று பாடசாலைகளில் இணைந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் சுமார் 2 ஆயிரம் வரையான இணைவு எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

2025 இல் 16 ஆயிரத்து 603 மாணவர்கள் வடக்கில் தரம் ஒன்றில் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

# மாணவருக்கு விற்கப்படும் கஞ்சா கலந்த மாவா தயாரிக்கும் இடம் யாழ் நகரில் சுற்றிவளைப்பு!




பாடசாலை மாணவர்களை குறிவைத்து விற்கப்படும் கஞ்சா கலந்த மாவா தயாரிக்கும் இடத்தை யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

இதன் போது சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் மாவா போதை பொருள் தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக யாழ் நகரில் வண்ணார்பண்ணை சிவன் கோயில் பின் வீதியான மாணிப்பாய் வீதிக்கு அண்மித்த ஒரு வீட்டில் வைத்து கஞ்சா கலந்த மாவா பாக்குத் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தகவல் கிடைக்க பெற்றுள்ளது.

யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் யாழ்ப்பானம் போதை ஒழிப்புப் பிவினரும் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்ட வேளை கஞ்சா கலந்த 4 கிலோ 250 கிராம் மாவா பாக்கு, பீடித்தூள் 12 கிலோ 500 கிராம் மற்றும் வாசனை திரவியம் 24 ரின் போன்ற பொள்கள் கைபெற்றபட்டன.

இதில் 24வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மாவா பாக்கை பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவணங்களில் உள்ள மாணவர்கள்தான் அதிகம் பாவிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.



# 36,000 ஏக்கரில் தெங்குச் செய்கை

இந்த வருடத்தில் 36,000 ஏக்கரில் புதிதாக தெங்குச் செய்கையை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

வடக்கு தெங்கு முக்கோண வலயத்தில் 16,000 ஏக்கரிலும் ஏனைய பகுதிகளில் 20,000 ஏக்கர் பயிரிட எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அலுவல்கள் பற்றிய அமைச்சரின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சரினால் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தெங்குச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் இந்த வருடத்தில் 2.5 மில்லியன் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருடத்தில் தெங்கு செய்கையின் ஊடாக 2,875 மில்லியன் தேய்காய்களை உற்பத்திச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் ஆலோசனைக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 5 ஏக்கருக்கும் குறைவான தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு உர மானியம்

5 ஏக்கருக்கும் குறைவான தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு உர மானியம் வழங்கப்படவுள்ளது.

ரஷ்யாவிலிருந்து இலவசமாகப் பெறப்பட்ட 55,000 மெற்றிக் தொன் MOP உரத்தில் 27,500 மெற்றிக் தொன் உரத்தை பயன்படுத்தி 56,000 மெற்றிக் தொன் கலப்பு உரத்தைத் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த கலப்பு உரத்தை 4,000 ரூபா மானிய விலையில் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

50 கிலோகிராம் கலப்பு உர மூடையொன்றின் தற்போதைய சந்தை விலை 9,500 ரூபாவாகும்.

நாடளாவிய ரீதியில் தெங்குச் செய்கையாளர்களுக்காக மானிய விலையில் விநியோகிக்கப்படவுள்ள கலப்பு உரத்தை இம்மாத இறுதியில் வழங்க திட்டமிட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# கம்பஹா, கிரிந்திவிட்ட பகுதியில் துப்பாக்கிச் சூடு: இருவர் காயம்




கம்பஹா – கிரிந்திவிட்ட பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று நேற்று மலை பதிவானது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன்படி காயமடைந்த இருவரும் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஆயுர்வேத மூலிகை வளர்ப்பு, சேகரிப்புக்கான தேசிய திட்டத்தை செயற்படுத்த தீர்மானம்



ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மூலிகை மருந்துகளின் உற்பத்தி வலையமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஆயுர்வேத மூலிகை வளர்ப்பு மற்றும் சேகரிப்புக்கான தேசிய திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த திட்டத்தை சுகாதார மற்றும் ஊடக அமைச்சு, ஆயுர்வேதத் திணைக்களம் மற்றும் ஆயுர்வேத கூட்டுத்தாபனம் என்பன இணைந்து செயல்படுத்துகின்றன.

அதன்படி, உள்ளூர் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை சேவைகளை வலுப்படுத்துவதற்காக உள்நாட்டு மூலிகைத் தோட்ட வலையமைப்பை வலுப்படுத்துவதன் ஊடாக உள்ளூர் ஆயுர்வேத மருந்து உற்பத்தியை அதிகரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், உள்ளூர் ஆயுர்வேத மருந்துகளின் உற்பத்திக்குத் தேவையான பல மருத்துவ மூலப்பொருள்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# 1 கோடி 72 லட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 72 லட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மாவட்ட தேர்தல் ஆணையாளர்கள், துணை மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் கலந்துகொண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

4,872 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்த தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று கலந்துரையாடப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# எம்.பி. பதவியினை விரைவில் பெண் ஒருவருக்கு வழங்குவேன்

## இராமநாதன் அர்ச்சுனா எம்.பி. சபையில் கூறுகின்றார்

தனது பதவியை விரைவில் பெண் ஒருவருக்கு வழங்கவுள்ளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்கான செலவு தலைப்பு மீதான நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு அவர் நேற்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டிலே பெண்கள் 25 வீதம் இருக்கின்றனர். ஆனால் நாடாளுமன்றத்திலே 9.8 வீதமான பெண் உறுப்பினர்களே காணப்படுகின்றனர்.

அதனை நான் 10 சதவீதமாக மாற்றுவேன். எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்டெம்பர் மாதமளவில் நாடாளுமன்றத்திலிருந்து விலகி பெண் ஒருவருக்கு இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவேன்.




இராணுவத்தினரின் குடும்பங்களுக்காக வரவு - செலவு திட்டத்தில் அதிக நிதியை ஒதுக்கியுள்ள அரசாங்கம் வடகிழக்கிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு அநீதி இழைத்துள்ளது.” - என்றார்.

# சிதைவடைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கண்டி மாவட்டம், கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி கங்கைக்கு அருகில் சிதைவடைந்த நிலையில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த வித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

45 முதல் 50 வயது மதிக்கத்தக்க நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.











# புதுக்குடியிருப்பை அழகுபடுத்தல், திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் கலந்துரையாடல்

(பா.சதீசன்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு நகரை அழகுபடுத்தல் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு நகரை அழகுபடுத்தல் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று காலை 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தலைமையில் ஆரம்பமாகிய இக்கலந்துரையாடலில் பலவிடயங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் அனைவரும் இணைந்து நடைமுறைப்படுத்த இணக்கம் ஏற்படுத்தப்பட்ட இருந்தது.

இதில் உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதேச வைத்திய அதிகாரி, வைத்தியசாலை அத்தியட்சகர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச சபை செயலாளர், வங்கி முகாமையாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரி, வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலர், வர்த்தக சங்கம், புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவை, முல்லை சமூக மேம்பாட்டு நிறுவன அலுவலர், பொலிஸார், இராணுவம், ஆடைக்கைத்தொழில் மனிதவள முகாமையாளர், முச்சக்கர வண்டி சங்கம் மற்றும் துறைசார் அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.













# கலாசாரம் சீரழியுமாக இருந்தால் எமது இலக்கை அடைய முடியாது!

## கிளிநொச்சி மகளிர் தின நிகழ்வில் ஆளுநர் தெரிவிப்பு

“கிளிநொச்சி மாவட்டத்தில் நான் மாவட்டச் செயலராக இருந்த காலத்தில் இங்கிருந்த பெண்கள் அமைப்புக்கள்தான் பல திட்டங்களை வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் செயற்படுத்தியிருந்தன. நியாப் திட்டத்தின் கீழான கடன் வழங்கலாக இருந்தாலும் சரி எந்தவொரு விடயமாக இருந்தாலும் சரி பெண்கள் தலைமைத்துவத்தை ஆளுமையாக வழங்கி அதைச் செய்திருந்தார்கள்.”

– இவ்வாறு பெருமையுடன் தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்.

சுதந்திரப் பறவைகள் மகளிர் பேரவையின் பன்னாட்டு மகளிர் தினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர் தனது உரையில்,

“இன்று பெண்களின் பாதுகாப்பு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. வேலைத்தளங்களிலும், பாடசாலைகளிலும், பொதுப்போக்குவரத்திலும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி வருகின்றது. இன்றைய சமூகப்பிறழ்வுகளாலும் அதிகம் பெண்களே பாதிக்கப்படுகின்றார்கள்.

இவற்றை இல்லாமல் செய்யவேண்டும். பெண் உரிமைக்காகக் குரல் எழுப்புவது மாத்திரமல்ல அதை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். சமத்துவத்துக்காகக் குரல் கொடுப்பதுடன் நின்றுவிடாது அதை யதார்த்தபூர்வமாக்க வேண்டும். இதுவே இன்றைய பன்னாட்டு மகளிர் தினத்தில் நாம் செய்யக்கூடியதொன்றாக இருக்கும்.

அரசால் வழங்கப்படுகின்ற உதவிகள் கூட கணவனால் வீட்டுக்கு வழங்கப்படுவதில்லை எனப் பல பெண்கள் முறையிட்டிருக்கின்றார்கள். அவர்கள் குடும்பத்தைக்கூட கவனிக்கின்றார்கள் இல்லை எனப் பல குடும்பப் பெண்கள் என்னிடம் சொல்லியிருக்கின்றார்கள். இதைப்போல அரச பணிகளில் பல தரப்பட்ட இடங்களில் பணிபுரியும் பெண்கள், குடும்பத்தினரின் ஒத்துழைப்பு இன்மையால் எதிர்கொள்ளும் இன்னல்களையும் எனக்குச் சொல்லியிருக்கின்றார்கள்.

இவையெல்லாவற்றையும் மாற்றியமைப்பதற்கு ஒவ்வொருவரும் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பது மாத்திரமல்லாது நடைமுறைப்படுத்தவேண்டும்.

இவற்றுக்கு அப்பால், வடக்கில் பெண்களுக்கான போதைப்பொருள் புனர்வாழ்வு மையம் அமைக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தளவு தூரம் நிலைமை இருக்கின்றது. கலாசாரம் சீரழியுமாக இருந்தால் எங்கள் இலக்குகளை நாங்கள் அடைய முடியாமல் போகும்.” – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்டச் செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி உதயனி நவரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

சிறப்பான பெண் ஆளுமைக்கான “மண்ணின் மாதவம் -2025“ விருதும் இந்த நிகழ்வின்போது ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டது.









# வெளிநாட்டு சிகரட்டுக்கள், மாத்திரைகள் கற்பிட்டி கடற்பரப்பின் ஈபான்தீவில் மீட்பு

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி கடற்பரப்பின் ஈபான்தீவு பகுதியில் கடல்வழியாக நாட்டுக்குள் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுக்கள் சுமார் 1,60,000 மற்றும் மாத்திரைகள் சுமார் 22,100 என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள் என.

கடற்படையினரின் விசேட தேடுதல் நடவடிக்கையின் போது ஈபான்தீவு பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட டிங்கி படகு சோதனைக்குட்படுத்தப்பட்டது. அப்போதே மேற்படி சிகரட்டுக்கள் மற்றும் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள் என.



இவ்வாறு சட்டவிரோதமாக வெளிநாட்டில் இருந்து சிகரட்டுக்கள் மற்றும் மாத்திரைகளைக் கொண்டு வந்தவர்கள் கற்பிட்டிக் கடற்பரப்பில் தொடர்ந்து கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட ரோந்து நடவடிக்கைகள் காரணமாக அவற்றைக் கை விட்டுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகக் கூறப்பட்டது.

கடற்படையினரினால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வவுனியா மாவட்ட மத்திய குழுக் கூட்டம்



(கே.எ.ஹமீட்)

வவுனியா மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் என்.மாஹிர் தலைமையில் கட்சியின் வவுனியா மாவட்ட மத்திய குழுக்கூட்டம் நேற்று முன்தினம் மாங்குளம், நேரிய குளத்தில் நடைபெற்றது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். எஸ். உதுமாலெப்பை, வவுனியா நகரசபை முன்னாள் உறுபினர் ஏ.எல்.எம்.முனவ்வர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வவுனியா மாவட்ட மத்திய குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





- புருஜோத்தமன் தங்கமயில் -

# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டெழுமா?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான களம் “தேசிய மக்கள் சக்தி எதிர் ஏனைய கட்சிகள்“ என்ற வடிவில் திறந்திருக்கின்றது. இலங்கையின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் வரலாற்றில் இப்படியொரு நிலைமை எப்போதுமே ஏற்பட்டதில்லை. தென் இலங்கையில் பிரதான கட்சிகளுக்கு இடையிலான போட்டியாகவும், வடக்குக் கிழக்கில் அதிக நேரங்களில் ஆளும் கட்சியை ஆதரிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் எதிரணியில் இருக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கும் இடையிலான போட்டியாகவே இருந்திருக்கின்றது. அதிலும் குறிப்பாக தமிழ் சூழல் என்பது தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர் ஆளும் ஆதரவு தமிழ்க் கட்சிகள் மற்றும் முன்னாள் துணை இராணுவக் குழுக்கள் என்ற அளவில்தான் காணப்பட்டிருக்கின்றது. ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பாய்ச்சல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியை அந்தக் கட்சிக்கு உறுதிப்படுத்தியது. அதில், தமிழ் மக்களும் பங்காளிகளாக நின்று, கடந்த காலங்களில் தாம் ஆதரித்து வந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இரண்டாம், மூன்றாம் நிலைக்கு தள்ளினார்கள். இது, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மாத்திரமல்ல தேசிய மக்கள் சக்திக்கும் அதிர்ச்சியளித்திருந்தது.

பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் பெரும் பின்னடைவைச் சந்தித்து ஏமாற்றமடைந்த தருணத்தில், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவரை அழைத்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, ஏன் உங்களுக்கு இந்தத் தோல்வி ஏற்பட்டது என்று வினாவியிருக்கிறார். அதற்கு, சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர், ”..எல்லாவற்றுக்கும் நீங்கள்தான் காரணம். அதாவது அநுர அலை. அதில் தென் இலங்கை மக்கள் மாத்திரமல்ல, வடக்கு மக்களுக்கும் அள்ளுண்டு சென்றுவிட்டார்கள்…” என்று பதிலளித்திருக்கிறார். அந்தப் பதிலில் பகுதியளவு உண்மையுண்டு. ஆனால், மிகுதியான உண்மை என்பது, தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் செய்து வரும் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பங்காளிகளின் பொறுப்பற்ற தனங்களினால் ஏற்பட்டது. அதுதான், யாழ்ப்பாணத்தில் கவனக் கலைப்பானாக வந்து இன்றைக்கு நாடாளுமன்றத்துக்குள் பொறுப்பற்ற கலகக்காரனான இருக்கும் வைத்தியரையும் கூட வெற்றிபெற வைத்தது. தேசிய மக்கள் சக்திதான் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தனித்து அதிக இடங்களைப் பெறப்போகின்றது என்பது தொடர்பில் எந்தத் தமிழ்த் தேசியக் கட்சிக்கும் சந்தேகம் இல்லை. ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையில் உள்ள வட்டாரம் – விகிதாசார குழப்பங்களினால், தேசிய மக்கள் சக்தியினால் ஆட்சி அமைப்பது என்பது சிக்கலானது. இந்த ஆறுதலில் நின்றுதான், தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளத் தலைப்படுகின்றன. தேசிய மக்கள் சக்திக்கு வடக்குக் கிழக்கில் இப்போதுள்ள நிலையில் சற்று சவால் அளிக்கும் நிலையில் தமிழரசுக் கட்சி மாத்திரமே இருக்கின்றது. ஆனால், அவர்களும் தங்களினால் எந்தச் சபையிலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது என்ற உண்மையையும் உணர்ந்துகொண்டு இருக்கிறார்கள். அதனால்தான், தங்களின் முன்னாள் பங்காளிகள் உள்ளிட்ட, தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள எந்தத் தரப்புடனும் தேர்தல் கால உடன்படிக்கைக்கு வருவது தொடர்பில் தமிழரசுக் கட்சி என்றைக்கும் இல்லாத அளவுக்கு கீழிறங்கி நின்று பேச்சு வார்த்தைகளை நடத்துகின்றது. ஒரு பக்கத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் வெளிப்படையான பேச்சுக்களை நடத்துவது கடிதங்களை மாறிமாறி எழுதுவது என்று இருக்கிறார். அத்தோடு தான் எழுதிய கடிதங்களுக்கான விளக்க உரைகளை ஊடக மாநாடுகளை நடத்தி வழங்கியும் வருகிறார். ஆனால், இவற்றையெல்லாம் தாண்டிய நிலையில், உள்ளூல் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள் அனைத்துடனும் பேச்சுக்களை நடத்த தலைப்படுகின்றனர். அதுவும் கடந்த காலங்களில் தங்களை துரோகிகளாக சித்திரித்து யாழ்ப்பாணத்துக்குள் அரசியல் செய்த தமிழ்த் தேசிய முன்னணியோடு கூட பேச்சு நடத்த தயாராக இருக்கின்றார்கள். இவையெல்லாம் ஏன் என்றால், தேசிய மக்கள் சக்தியின் தமிழ் மக்களுக்கு இடையிலான பாய்ச்சல் என்பது “அநுர அலை” என்ற விடயம் சார்ந்தது

தொடர்ச்சி▲



# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டெழுமா?

தொடர்ச்சி▲

மாத்திரமல்ல என்ற புரிதல் ஏற்பட்டதன் விளைவினாலாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்துக்குள் இருக்கும் பத்துத் தொகுதிகளின் தேர்தல் முடிவுகளை எடுத்து பார்த்து விடயங்களை ஆராய்ந்தாலே, தமிழ்த் தேசியக் கட்சிகள் கடந்த காலங்களில் கவனிக்கத் தவறிய விடயங்கள் எல்லாமும் தோல்வி என்ற பதில்களினால் நிரம்புகின்றன. குறிப்பாக, பொறுப்பற்று தலைக்கனத்துடன் நடத்துகொண்டதன் விளைவுகள்தான், தேசிய மக்கள் சக்திக்கு வலுச் சேர்த்திருக்கின்றன என்ற விடயங்கள் புலப்படும். தமிழ் மக்களை “தமிழ்த் தேசியம்“ என்ற உணர்வுபூர்வமான விடயத்துக்குள் சிக்க வைத்தால் போதும் காலங்காலமாக வாக்களித்து நிலை நிறுத்துவார்கள் என்பது தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் எண்ணம். அந்த எண்ணத்தினால், சமூகங்களுக்கு இடையிலான உள்முரண்பாடுகள், சமூக அங்கீகாரம், பிரதிநிதித்துவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது கடந்து நின்றிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்த் தேசியக் கட்சிகள் என்பது, கிட்டத்தட்ட ஒரு சில முக்கிய சமூகத்தினரைச் சுற்றி சுழல ஆரம்பித்ததன் விளைவுகள் அவை. யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் தேர்தல் தொகுதிகளில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பெரும் பின்னடைவு என்பது ஏன் என்று அறிந்து ஆய்வதில் யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இருப்பது மாதிரித் தெரியவில்லை. உதாரணத்துக்கு, யாழ்ப்பாண மாநகர சபையின் பெரும்பான்மை வட்டாரங்களைக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத் தொகுதிக்குள் தமிழரசுக் கட்சியினால் ஆனோல்ட் என்ற ஒரு நபரைத் தாண்டி இன்னொருவரை அடையாளப்படுத்த முடியவில்லை. அல்லது, அது தொடர்பில் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனோல்ட் தொடர்ச்சியாக தேர்தல்களில் போட்டியிட்டு அதிகம் தோற்றவர். அவரைத் தவிர, பெரிதாக யாரையும் அங்கு வளர்க்கவில்லை. அல்லது அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கவில்லை. அந்த எரிச்சல் மற்றும் ஆத்திரத்தின் விளைவினைத்தான், கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை நோக்கிய வாக்குகளாக யாழ்ப்பாணத் தொகுதி வாரி வழங்கியது.

அதுபோல, நல்லூர் தேர்தல் தொகுதி என்பது யாழ்ப்பாணத்தின் உயர்மட்டச் சமூகத்தின் கோட்டை என்பது அனைத்துத் தமிழ்க் கட்சிகளினதும், புலம்பெயர் தரப்புக்களினதும் எண்ணம். அதனால், அங்கு தொடர்ச்சியாக யாழ் மையவாத தரப்பினர்தான் அடையாளப்படுத்தப்பட்டும் அங்கீகரிக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். ஆனால், அந்தத் தொகுதியின் சமூக கட்டமைப்பு என்பது பரவலாக மாறிவிட்டது. அப்படியான சூழலில், அனைத்துச் சமூகங்களுக்குமான அங்கீகாரத்தை கொடுப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் கவனம் செலுத்தவில்லை. 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிந்ததும், தமிழரசுக் கட்சியின் பின்னடைவு தொடர்பிலான உரையாடல்களில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அதனைக் குறித்து அந்தக் கட்சியோ, அதன் ஆதரவாளர்களோ பெரிதளவில் கவனம் செலுத்தவில்லை. விளைவு, கடந்த பொதுத் தேர்தலில் நல்லூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி மூன்றாமிடத்துக்கு தள்ளப்பட்ட காட்சி அரங்கேறியது. இப்படி யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும், பிரதேசத்தையும் எடுத்து காய்தல் உவர்த்தல் இன்றி ஆராய்ந்தால், தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ்த் தேசியம் என்ற ஒன்றைக் காட்டிக் கொண்டு பல சமூகங்களை கைவிட்டு கடந்து நின்று ஒருசில ஆளுகை செலுத்தும் சமூகங்களின் – சாதிகளின் கட்சியாக தன்னை காட்டிக் கொண்டதன் விளைவினால் ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். தமிழரசுக் கட்சி மாத்திரமல்ல, அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அப்படித்தான் இயங்குகின்றன. கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளில் எண்பது வீதமானோர் ஒரே சாதி சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையவர்களும் வெற்றிபெறக் கூடிய ஆளுமைகளாக இல்லை. அவர்களை ஒப்புக்காக நிறுத்தி அரசியல் செய்திருக்கிறார்கள். இந்த நிலை யாழ். மையவாத சிந்தனைகளினால் வருவது. இந்த நிலை தொடர்ந்தால், இந்தத் கட்சிகள் பேசும் மேம்போக்கு தமிழ்த் தேசியத்தைக் காட்டிலும், தங்களுக்கான அங்கீகாரத்தை வழங்கத் தயாராக இருக்கும் தேசிய மக்கள் சக்தியில் சரணடைவதில் தப்பில்லை என்று தோன்றும். அந்த எண்ணம் தமிழ் மக்க

தொடர்ச்சி▼



# உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் மீண்டெழுமா?

தொடர்ச்சி▲

ளிடம் ஏற்பட்டுவிட்டால், அதிலிருந்து மீட்டெடுப்பது என்பது மிகவும் சிக்கலாகிவிடும். ஏனெனில்,தற்போதுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளோ, அதன் தலைவர்களோ இன விடுதலைக்கான போராட்டத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் அளவுக்கான தியாகிகள் இல்லை. பதவி, பகட்டுகளுக்கான போட்டி பொறாமையில் உழன்று வருபவர்கள். கடந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பும் அதன் பெரும் பாய்ச்சலும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அர்ப்பணிப்பின் நாயகர்களினால் நிகழ்ந்தப்பட்டது. இப்போது அவர்கள் இல்லை. அவர்களைக் காட்டிக் கொண்டு, தங்களின் ஆற்றலின்மையைக் கடந்து விடலாம் என்று நினைத்தால், இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று முட்டுச் சந்துக்குள் நிற்பதைக் காட்டிலும் மோசமான கட்டத்துக்குள் சிக்கும். அது தமிழ்த் தேசிய விடுதலைக்கான பயணத்தைத் தோற்கடித்துவிடும்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளும் தரப்புக்களும் தங்களின் கடந்த கால கசடுகளை களைந்து, மக்களை இணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அத்தோடு, தேர்தலுக்கு முந்தைய இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதன் மூலமே, தமிழ்த் தேசிய அரசியலை தொடர்ந்தும் முதன்நிலையில் வைத்திருக்க முடியும். ஏனெனில், தமிழ்த் தேசியம் தேர்தலுக்கான நிலைப்பாடு அல்ல. ஆனால், அந்தத் தேர்தல்களில் அந்த நிலைப்பாட்டினை தோல்வியின் பக்கத்துக்கு தள்ளுவது என்பது, மக்களிடம் மெல்ல மெல்ல தமிழ்த் தேசியம் மீதான நம்பிக்கையை இழக்க வைக்கும். கடந்த காலத்தில் அங்கஜனின் வெற்றியை யாழ்ப்பாணம் பதிவு செய்த போதும், இப்போது வைத்தியரின் வெற்றி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாய்ச்சல் என்பன என்ன விடயங்களை உணர்த்துகின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கு பெரிய புத்திஜீவிகளாக இருக்க வேண்டியதில்லை. அது சாதாரண மக்களுக்கு நன்றாக விளங்கும். ஆனால், அதனைப் புரிந்து கொண்டும் புரியாதது மாதிரி நடித்துக் கொண்டிருப்பது யாழ். மையவாத தரப்புக்களும், அதன் புலம்பெயர் ஒத்தூதும் தரப்பினருமே. இவர்கள்தான் தமிழ்த் தேசியத்தின் பெரும் பின்னடைவுகளுக்கு பெரும் காரணங்களாக மாறி வருகிறார்கள். தனி நபர்களையும், செயலற்ற – தூர நோக்கற்ற அமைப்புக்களையும் சுற்றி ஒளிவட்டங்களையும், ஜனவசிய கதைகளையும் இந்தத் தரப்பினர் வரைந்து கொண்டிருக்க தேசிய மக்கள் சக்தி போன்ற களச் செயற்பாடுள்ள தரப்பினர் ஆழ ஊடுருவி விடயங்களை சாதித்து நகர்கிறார்கள். தமிழ் அரசியல் ஆயுதப் போராட்ட வரலாற்றில் ஆழ ஊடுருவும் அணிகள் ஏற்படுத்திய தோல்விகள் பல. அப்படியான நிலையில், அவற்றைப் புரிந்தும் புரியாமல் நின்று மேம்போக்கான அரசியல் பேசுவது அபத்தமானது.

தமிழ்த் தேசிய அரசியலின் பாதுகாப்பு என்பது ஆக்கிரமித்து அட்டகாசம் புரியும் பெரும் சிங்கள மேலாதிக்க வாதத்தை எதிர்ப்பதினால் மாத்திரம் நிகழ்ந்துவிடாது. தமிழ் மக்களிடம் காணப்படும் இடைவெளிகளைக் களைந்து, அனைத்து சமூகங்களுக்குமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டு மேலெழுவதன் மூலமே சாத்தியமாகும். அதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முக்கியமான கருவி. இப்போது கிடைத்திருக்கின்ற இந்த கருவியை சரியாக கையாண்டு மேலெழ வேண்டும். இல்லையென்றால், தமிழ்த் தேசிய அரசியல் மெல்லக் கரையும். இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களின் விருப்பு வெறுப்புக்களை மறந்து நின்று, சபைகளைக் கைப்பற்றுவதற்கான இணக்கப்பாட்டுக்கு வந்தாக வேண்டும். அந்த இணக்கப்பாடு எழுத்துபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதல்ல. திறந்த மனதுடன் பேச்சுக்கள் நடத்திக் காணப்பட வேண்டும். அதன்மூலமே, தமிழ்த் தேசிய அரசியலின் நீட்சியைத் தக்க வைக்க முடியும். தமிழ்த் தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் கீழ்க்கண்டவாறு கூறினார், "...யாழ். மாநகர சபையை தேசிய மக்கள் சக்தியிடம் இழந்துவிட்டு, நாங்கள் தமிழ்த் தேசியம் பேசுவதில் பயனில்லை. அதுவொரு அடையாளம். அப்படியான நிலையில், அனைத்துத் தரப்பினரும் தனிப்பட்ட நிலைப்பாடுகள் கடந்து இணைந்து இயங்க வேண்டும். அதற்காக பேசியாக வேண்டும்..." என்றார். கடந்த பொதுத் தேர்தல் தோல்வி தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு நல்ல படிப்பினைகளை வழங்கியிருக்கின்றது. அதிலிருந்து மீண்டுவருவது தொடர்பில் சிலர் சிந்திப்பது மாதிரியும் தெரிகின்றது. அப்படியான நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அதற்கான களமாக தமிழ்த் தேசியக் கட்சிகள் பயன்படுத்தி மீண்டெழ வேண்டும். இல்லையென்றால், தமிழ்த் தேசியக் கட்சிகள் தேசிய மக்கள் சக்தி போன்ற பேரலையில் சிக்கி இன்னும் இன்னும் அலைக்கழிக்கப்பட்டு தூர வீசப்பட்டு விடும்.





# பாவம் தமிழ் மக்கள்



- வி.எஸ்.சிவகரன் -

"ஓய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம், உள்ளே இருக்குமாம் ஈரும் பேணுமாம்." இப் படித்தான் இருக்கிறது தமிழ்த் தேசியக் கட்சிகள் எனக் கூறிபவற்றின் நிலை.

தோல்விகளிலிருந்து தன்னை தகவமைத்துக் கொள்ளத் தெரியாத ஒரே இனம் தமிழினம். இனவிடுதலை என்கின்ற கோட்பாட்டுச் சித்தாந்தத்தில் வலிமையாக நிலைத்து நிற்க வேண்டிய இனம் சுயநலத்தாலும் சந்தர்ப்பவாதத்தாலும் சிதறிக் கிடக்கிறது.

தன்பங்கு தாவென்ற தம்பியும், தம்பியோடு இன்புற்று வாழா தனயனும், வல்லாண்மை பேசும் மனையாளும் இவை மூன்றும் கொல்லாமல் கொல்லும் கூற்றுவன்" என்னும் இலக்கிய கருத்தியல் நிலைப்பாட்டிலே தான் மூழ்கிக் கிடக்கிறார்கள் இவர்கள். தம்மைத் தாமே உயரவானவர்களாக எண்ணிக்கொண்டு அரசியலிலே ஒவ்வொருவருடைய உயரம் என்ன என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு உணர்ந்து கொள்ளாவிட்டால் காலத்தால் உணர்த்தப்பட்டு வெளியேற்றப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் .

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே இது வெள்ளிடைமலையானது. அரசியல் கணக்கு வழக்கை திடசங்கற்பத்தோடு நோக்கு நிலையில், வலுவான இருப்பியல் வாதத்தில் பெரு ஐக்கியம் கொண்டு, வெற்றி பெறக்கூடிய யதார்த்த சூழலை ஏற்படுத்தி, அதில் இருந்து நகர்த்த வேண்டிய கடப்பாடும் தார்மீகப் பொறுப்பும் தலைமை தாங்குகின்றோம் என கூறுபவர்களுக்கு உண்டு.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலோடு ஐக்கியப்பட வேண்டிய அவசியத்தைத் தரப்புகள் உணர்ந்திருக்க வேண்டும்.

தற்போது ஏட்டிக்கு போட்டியாக கடிதம் எழுதும் போட்டியிலே தமிழ்த் தலைவர்கள் என சொல்லப்படுபவர்கள் ஈடுபடுகிறார்கள். அதிலும் கூட மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன் வைத்தும், யார் சரியானவர்கள் எனத் தமக்குத் தாமே வாதங்களை முன்வைத்தும் வருகின்றனர். சிவஞானத்தின் ஐக்கிய முயற்சியை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அப்படி கருதி இருந்தால் தமக்குள் ஒரு கூட்டமைத்திருக்க முனைந்திருக்க மாட்டார்கள். சாட்டுப் போக்குக்கு ஒரு கடிதத்தையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியும் மற்றவர்களைக் கூட்டுக்கு அழைக்க முன்னர் தமக்குள் இருக்கின்ற பிணக்கை தீர்க்காமல் மற்றவர்களோடு கூட்டு வைக்க முனைவது யதார்த்தத்திற்கு அப்பால் பட்டது.

கட்சிக்குள் இருக்கும் உள்கட்சி முரண்பாடு எட்டு மாவட்டத்திலும் எதிரொலிக்கின்றது. அதனால் வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பல்வேறு விதமான விளைவுகளை அந்தக் கட்சி சந்திக்க நேரிடும். அதனை சீர் செய்து, எல்லோரையும் ஐக்கியப்படுத்தி, அணி சேர்ந்து போகக் கூடிய அளவில் இரண்டு குழுக்களில் இருந்தும் எந்த முனைப்புகளும் காட்டப்படவில்லை. அரசியல் எதிரி, சித்தாந்த எதிரி போன்ற இருவகையான அரசியல் நிலைப்பாட்டை சமரசங்களுக்கு அப்பால் வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உண்டு. அதனை மறந்து, வரவு - செலவுத் திட்டத்தில் கூட எதிர்த்து வாக்களிக்கவும் இல்லை, தாங்கள் ஏன் வாக்களிக்கவில்லை என்று காரணத்தை வெளிப்படையாகக் கூறவும் இல்லை. ஜனநாயகக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆதரித்து வாக்களித்தமிருந்தார். ஆகவே அரசோடு மென் போக்கை கடைபிடிக்கின்ற நிலைமை தொடருமாக இருப்பின் தமிழ் மக்களில் மீதமாக உள்ளவர்களும் கூட நேரடியாக அரசை ஆதரிக்கும் மனோநிலை ஏற்பட்டுவிடும். அவ் அரசியலைப் புரிந்து கொள்ளாமல் மக்களினுடைய உணர்வுகளையும் கள நிலைமைகளையும் வாக்காளர்களினுடைய மனோநிலையையும் அறிந்து கொள்ளாத அரசியல்வாதிகளாக இருப்பதினால்தான் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து பின்னடைவு ஏற்படுகின்றது.

ஒன்றில் எதிர்ப்பு வாக்கை தனதாக்கிக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் நிலையான வாக்கு வங்கியை உருவாக்கி வைத்திருக்க வேண்டும்.

உணர்ச்சி வசத் தளம்பல் வாக்கைத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் இதுவரை தமது வாக்காக கருதி வந்தன. இதில் எந்த நிலையும் இல்லாமல் இருந்தால் வாக்காளர்கள் தமது நோக்கை திசை மாற்றி விடுவார்கள்.

இந்த தேர்தலில் பிரிந்து கேட்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியான விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் கூறிக் கொண்டாலும் கூட, மக்களினுடைய கூட்டு ஐக்கிய எண்ணவுணர்வுக்கு எவ்விதமான பிரதிபலிப்பை ஏற்படுத்த போகிறது என்று தெரியவில்லை. தமிழரசு கட்சி கடந்த காலத்தில் தனித்துத் தேர்தலை சந்தித்து விட்டுப் பின்னர் ஐக்கியமாகி கொள்ளலாம் என எடுக்கப்பட்ட காலத்தில் தமிழரசு கட்சி வடக்கு கிழக்கில் முதன்மை கட்சியாக இருந்தது. தற்போது அந்த நிலை இல்லை. அந்த முதன்மை நிலையை இழந்த பின்னர் - அந்த இடத்திற்கு பொது எதிரி வந்துவிட்ட சூழ்நிலையில் - ஐக்கியம் என்பது அவசியம் என்பதனை கடந்த நாடாளுமன்றத் தேர்தல் உணர்த்தியது. அதற்குப் பின்னரும் கூட இந்த கடிதத் தலைப்பு கட்சிகளும்

தொடர்ச்சி▼





# பாவம் தமிழ் மக்கள்

தொடர்ச்சி▲

சரி ஏனையவர்களும் தங்களுக்குள் ஒரு ஒருமைப்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும்.

பல முயற்சிகள் பல வழிகளில் மேற்கொள்ளப்பட்டன.



பெரியண்ணன் பாத்திரத்திற்கு யாரும் இல்லை என்பதனால் ஐக்கிய படுவதிலே அசட்டையாக இருக்கிறார்கள். எல்லோரும் தலைவர்களாக இருக்க வேண்டும், எல்லோரும் பதவியை அனுபவிக்க வேண்டும் என்றால் எப்படி ஐக்கியம் சாத்தியம்? குறைந்தபட்ச விட்டுக் கொடுப்போடு இன விடுதலையே இலக்கு என்கின்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்பட மறுப்பவர்கள் தூய நோக்கோடு பாதிக்கப்பட்ட இனத்துக்கு தலைமை தாங்குவதற்கு தகுதி உடையவர்களா?

இவ்விதமான உள்கட்சி முரண்பாடும், கூட்டமைப்பதில் பின்னடைவும், தமக்குள்ளே விமர்சனங்களை பரிமாறிக் கொள்ளும் நிலையும் தொடருமாக இருப்பின் தமிழ் மக்கள் முழுமையாக தென்னிலங்கை கட்சிகளை ஆதரிக்கின்ற அபாய நிலைமை ஏற்படும்.

அதற்குப் பின்னர் எப்படி தமிழ் மக்களை தம் வசப்படுத்துவது என்பதற்கு எந்த விதமான வழி வரைபடமும் எந்த தமிழ்க் கட்சியிடமும் இல்லை. ஏனெனில் ஜன வசீகரம் உள்ள தலைவர்களோ அதை கட்டமைத்து கூட்டாக வழிநடத்த வேண்டிய தலைவரோ எந்தத் தமிழ்க் கட்சியிடமும் இல்லை. இதனால் இவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் என தமிழ் மக்கள் எண்ணுவதால்தான் இவர்களை விட சிங்களக் கட்சிகள் பரவாயில்லை என ஒப்பீடு செய்கிறார்கள்.

வடக்கு, கிழக்கிலே உள்ள எந்த ஒரு சபையிலும் இம்முறை எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சி அமைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாகத் தெரியவில்லை. சில வேளை நாடு முழுவதும் கூட இந்த நிலைமை தொடரக்கூடிய வாய்ப்பு உண்டு. அடிமட்ட ஜனநாயகம் எனும் நிர்ணயத்தில் குறிப்பிட்ட வாக்குச் சதவீதத்தை பெறுபவர்களுக்கு ஆசனங்கள் கிடைக்கக்கூடிய நிலை காணப்படுவதால் 60 வீதம் உள்ள வட்டாரங்களை முழுமையாக எந்தக் கட்சியும் கைப்பற்றக்கூடிய களச் சூழல் இல்லை. இத்தேர்தலில் கொள்கை கோட்பாடுகளுக்கு அப்பால் சாதி, சமூகம், பணம், அந்தஸ்து போன்றவை செல்வாக்கு செலுத்தும். ஆகவே இத்தேர்தல் ஒரு தமிழ்த் தேசியக் கோட்பாட்டு ரீதியான வாக்கு வங்கியின் கணக்கை பார்க்க முடியாவிட்டாலும், தமிழ் மக்களுக்கு ஐக்கியமும் வலிமையான தலைமையும் தெற்கோடு கொள்கை ரீதியாக வலிமையோடு பேரம் பேசக்கூடிய தலைமையும் உருவாக வேண்டும். அவ்வாறு உருவாகி, நீதிக்கு அப்பால் சமரசம் அற்றவர் என்கின்ற பொது நம்பிக்கை வடக்கு கிழக்கு தமிழர் தாயக மக்களிடத்தில் ஏற்படாத வரைக்கும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் தொடர போகிறது.

காலநீட்சி தமிழ் தேசியம் என்கின்ற இருப்பியல் வாதத்தை இல்லாமல் செய்யக்கூடிய ஆபத்தான நிலை தோன்றுகிறது. இந்தச் சமூகம் சலுகைகளுக்கு ஆசைபட்டு சந்தர்ப்பவாத மனோ நிலையில் பயணிப்பதாலும், பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதாலும், தேசியக் கோட்பாட்டின் இருப்பை நிலை நிறுத்தக்கூடிய மக்கள் கூட்டம் மாறாக இருக்கக்கூடிய நிலையில் எமது எண்ணங்கள் எப்படி ஈடேற போகின்றன என்பதற்குத்தான் காலக்கண்ணாடியிடம் விடை தேட வேண்டி இருக்கிறது.

ஆனாலும் நாம் இவற்றை முறியடித்து எமது கோட்பாட்டுச் சித்தாந்தத்தை எப்படி நிலை நிறுத்தலாம் என்கின்ற வழியை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இல்லையேல் தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளாலேயே காணாமல் போகக் கூடிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

அதனை அவர்கள் புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். அவ்வாறே புரிந்தாலும் தெளிந்து கொள்ளவும் மாட்டார்கள். மாறப்போவதும் இல்லை. மாற்றத்தை ஏற்படுத்த வேணடியது தமிழ் மக்களின் தற்போதைய நிலையாகும். ஆகவே உள்ளூராட்சியிலிருந்து இந்த மாற்றத்தை நோக்கி நகர்த்த வேண்டியது இன விடுதலை சார்ந்து சிந்திக்க கூடிய ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். இத்தேர்தல் முடிவு இத்தமிழ் கட்சிகளுக்கு பல்வேறு விதமான படிப்பினைகளை ஏற்படுத்தும். அதற்குப் பின்னராவது – மாகாண சபையிலாவது – ஐக்கிய படுவார்கள் என நம்புவோம். இல்லையேல் இவர்கள் எல்லோரையும் அகற்றிவிட்டு புதிய பார்வையில் இளையோர்கள் பொறுப்பெடுக்க வேண்டிய இக்கட்டான சூழலை ஏற்படுத்த வேண்டியதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்படுகிறது. இன்னும் புலிகளால் உருவாக்கிய வீட்டுச் சின்னம் என நம்புகின்ற கடைக்கோடி சாமானிய வாக்காளர் இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசிய அரசியல் உருப்படுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை.



# வடக்கின் பெரும் போரில் வென்றது பரியோவான் கல்லூரி

**(பிரபாகரன் டிலக்சன்)**

118ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 5 விக்கெட்டுக-ளால் வெற்றிபெற்றது.

வடக்கின் பெரும் போர் என அழைக் கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 118ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டச் சமர் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

தொடர்ச்சியாக 3 நாட்கள் இரண்டு இன்னிங்ஸ்களாக இடம்பெறும் இப் போட்டியில் அஷ்னாத் தலைமையி லான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் நியூட்டன் தலைமையி லான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. அதன் பிரகாரம் முதலில் துடுப்படுத் தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 57.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரி சார்பில் அபிஷேக் 27 ஓட்டங்களையும், சிமில்டன் மற்றும் நியூட்டன் 24 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அணித் தலைவர் அஷ்னாத் 5 விக்கெட்டுகளையும், மாது லன், ரண்டியோ ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் தனது முதல் இன்னிங் ஸில் துடுப்பாடிய யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரி 66 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களை பெற்று 50 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அனுஷாந் 86 ஓட்டங்களையும், அஷ்னாத் 29 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் அணித் தலைவர் நியூட்டன் 5 விக்கெட்டுகளையும், முரளி திசோன் 2 விக்கெடுகளையும் கைப்பற்றினர்.

50 ஓட்டங்கள் பின்னிலையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது இரண்டாம் இன்னிங்ஸிற்காக துடுப் பெடுத்தாடி 54 ஓவர்களில் 8 விக்கெட்டு களை இழந்து 135 ஓட்டங்களை பெற்றபோது இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்கை ஆடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது இரண்டாம் இன்னிங்ஸ்க்காக 59 ஓவர்களில் அனைத்து விக் கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் சிமில்டன் 34 ஓட்டங்களையும் அபிலாஷ் 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அஷ்னாத் 4 விக்கெட்டுகளை யும் மாதுளன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் 93 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரி 28.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் அபி யோசுவாந் 33 ஓட்டங்களையும், அஷ்னாத் 29 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் அணித் தலைவர் நியூட்டன், முரளி திசோன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றி னர்.



# இன்றைய ராசி பலன்கள் -09.03.2025




உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று அவநம்பிக்கையும் அமைதியின்மையும் காணப்படும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் அதிகம் சாதிக்கலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொண்டு நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஏமாற்றத்தை அளிக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும்.




இன்று மிதமான பலன்களே காணப்படும். இன்று செயல்கள் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். சில பணிகள் நிலுவையில் நிற்கும். இன்றைய சவால்களை சந்திக்க சமநிலை போக்கு தேவை.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நீங்கள் வருத்தமான மனநிலையில் இருப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு எழும். இதனால் முரண்பாடு எழும். இருவரும் பரஸ்பரம் பேசிக் கொள்வதன் மூலம் தீர்வு காணலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் தாயாருக்கு சிறிய உடல் நலக் கோளாறு காணப்படும்.




இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். கவனம் மற்றும் சிறப்பான திட்டம் நல்ல பலன் தரும்.

நீங்கள் உங்கள் துணையுடன் விஷயங்களை தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது நிலையான உறவிற்கு நல்லதல்ல. எந்த விஷயத்தையும் லேசாக சாதரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. இன்று கணிசமான தொகை சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைவு.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மற்றும் யோகா மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் ஏற்படும்.




இன்று சுமூகமான பலன்கள் கிட்டாது. உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் திட்டமிட்டு கடினமாக உழைக்க வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் சக பணியாளர்களின் வளர்ச்சி காரணமாக நீங்கள் பாதுகாப்பற்ற தன்மை உணர்வீர்கள். அவர்கள் பணியில் முன் நிலையில் இருப்பார்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது வன்மையாக நடந்து கொள்வீர்கள். பதட்டமில்லாத நல்லுறவை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலையில் ஏற்ற இறக்கம் காணப்படாது. பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டியது அவசியம்.




இன்று சகஜமாகவும் நகைச்சுவை போக்கும் மேற்கொண்டால் நன்மை ஏற்படும். பிரச்சினைகளை சமாளிக்க இயலும். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக ஆற்றலாம். அதன் மூலம் வெற்றி காணலாம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு கவனமற்ற வார்த்தைகளை பேச வாய்ப்புள்ளது. இது உறவில் மகிழ்ச்சியைக் கெடுக்கும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

கண் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -09.03.2025




இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும். புத்துணர்ச்சியோடு காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபகரமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிகளை ஒழுங்காக உற சாகத்துடன் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் அவர் உங்கள் உற வின் மதிப்பை உணரலாம்.

இன்று போதிய அளவு நிதி காணப்படும். உங்கள் பணத் தேவைகள் இன்று பூர்த்தியடைய அது உதவும். நீங்கள் அதிக அளவில் பணம் சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது சில சமயங்களில் நீங்கள் பொறுமையின்றி காணப்படுவீர்கள். நீங்கள் தைரியம் இழக்கும் வகையில் கடினமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

நீங்கள் அற்ப விஷயங்களைக் கூட பெரிதாக்கு வீர்கள். இது உங்கள் உறவில் குழப்பத்தை ஏற்படுத் தும். நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பயணத் தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். இன்று செரி மானம் சம்பந்தமாக பிரச்சினை காணப்படும்.




இன்றைய நாள் சிறந்த பலன் தர சாதகமாக அமையாது. நீங்கள் கடின மாக உழைக்க வேண்டியது அவசி யம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

பரபரப்பான பணிச்சூழல் காணப் படும். ஓய்வெடுக்க நேரம் காணாது. இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க தவறுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

இன்று உங்கள் வங்கியில் கணிசமான தொகை பராமரிக்க இயலாது. செலவுகள் காரணமாக கையி ருப்பு பணம் கரையும்.

இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். இதனால் பதட்டம் ஏற்பட்டு ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று வாய்ப்புகளும் அதிர்ஷ்டமும் நிறைந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தன்னம் பிக்கை அதிகரித்துக் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக் கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் உயர்ந்த நிலை அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனால் உங்களிடம் திருப்தி காணப்படும். உங்கள் வங்கி யிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சிய ளிக்கும்.

